15—

மாசினைத் தடுத்தல்

***56935—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆரணி தொகுதி, ஆரணி பகுதியிலுள்ள நவீன அரிசி ஆலைகள் மூலமாக ஏற்படும் மாசினைத் தடுக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: *மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பாதங்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி பகுதியில் இயங்கிவரக்கூடிய சுமார் 200 நவீன அரிசி ஆலைகளில் 130 ஆலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் அறிவுறுத்தலின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பினை நிறுவி இயக்கி வருகின்றன. மீதமுள்ள அரிசி ஆலைகள் இந்த அமைப்பினை நிறுவுவதற்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்த ஆலைகள் காற்று மாசினைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் புகைபோக்கியில் நீர்வடிப்பான் அமைத்து இயக்கி வருகின்றன. இந்த ஆலைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிறந்திருக்கக்கூடிய 2016 ஆம் ஆண்டு தமிழக மக்களுக்கும், தமிழகத்திற்கும் மாற்றமும் ஏற்றமும் தரக்கூடிய ஒரு நல்ல ஆண்டாக அனைவருக்கும் அமைய வேண்டுமென்ற என்னுடைய புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியில் இருக்கக்கூடிய 327 அரிசி ஆலைகளில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, ஏறத்தாழ 90 விழுக்காடுகளுக்கு மேற்பட்ட அரிசி ஆலைகளிலே, கழிவுநீர் சுத்திகரிக்கக்கூடிய வசதிகளைச் செய்திருக்கின்றார்கள். தமிழகத்திலே தஞ்சைத் தரணிக்கு அடுத்தபடியாக, ஆரணி பகுதியிலே பெரும்பான்மையான அரிசி ஆலைகள் இருக்கின்றன. ஆரணி பகுதியிலே தயாராகக்கூடிய அரிசி, உலக நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே, மிகப் பெரிய அளவிற்கு, வருவாயை ஈட்டித் தரக்கூடிய அளவிலே தமிழக அரசுக்கு தனது பங்கைச் செலுத்திக்கொண்டிருக்கிறது.

எனவே, அந்த அரிசி ஆலைகளில் இருக்கக்கூடிய புகை போக்கிகள் நல்ல முறையிலே பயன் அளித்துக் கொண்டிருக்கின்றன. நல்ல முறையிலே அவற்றைப் பராமரித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே, ஒரு சில ஆலைகளில் இருந்து வரக்கூடிய புகையைக் கட்டுப்படுத்த வேண்டும். அதோடுமட்டுமல்லாமல், சுற்றுப்புறங்களில் இருக்கக்கூடிய விவசாயப் பெருமக்களுடைய நலனைப் பேணுகின்றவகையிலே, இந்தச் செயல் திட்டங்களை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தமிழகத்திலே மாற்றமும், ஏற்றமும் வேண்டுமென்று சொன்னார்கள். அடுத்த முறை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலே (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிகளே இல்லாத ஒரு சட்டப் பேரவை அமையும் என்கின்ற மாற்றத்தை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் ஆர்வத்தோடு இன்றைக்கே செயல்படுத்துவதற்குத் தயாராக இருக்கின்றார்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி பகுதியில் இயங்கி வருகின்ற 200 நவீன அரிசி ஆலைகள் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தில் உரிய இசைவாணையைப் பெற்றுள்ளன.

இந்த அரிசி ஆலைகளின் செயல்முறையான நெல் வேகவைத்தலின்போது வெளிவருகின்ற கழிவுநீரை, சுத்திகரிப்புச் செய்யத் தேவையான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய அமைப்புகளை நிறுவ அறிவுறுத்தப்பட்டு, சுமார் 130 நவீன அரிசி ஆலைகள் கழிவுநீரினை சுத்திகரிக்கத் தேவையான அமைப்புகளை நிறுவி இயக்கி வருகின்றன. அரிசி ஆலைகளில் கொதிகலனுக்குப் பயன்படுத்துகின்ற எரிபொருள்கள் மூலமாக ஏற்படுகின்ற புகை, துகள், மாசுக்கள் ஈர வடிப்பான்மூலம் கட்டுப்படுத்தப்பட்டு உயர்ந்த புகைபோக்கிமூலம் வெளியேற்றப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதியுள்ள அரிசி ஆலைகளில் தற்போது இயக்கத்திலுள்ள 26 தொழிற்சாலைகளுக்குக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி அந்த மாவட்டத்தினுடைய சுற்றுச்சூழல் துறை பொறியாளருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. மீதியுள்ள 44 அரிசி ஆலைகள் நலிவடைந்த நிலையிலே உள்ள காரணத்தாலே அந்த ஆலைகள் இயங்கவில்லை என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாமல் எங்கெங்கேயோ போய்க்கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) அனுமதியில்லை, அவ்வளவுதான். மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியாக இருப்பதனால், இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.